<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 38/2021

Deposition of Witness : DW 1

Name : சொக்கலிங்கம் (வயது – 75)

Father's Name /W/o : த/பெ வாசுதேவன்

Religion : இந்து

Calling : –

Address : மோசூர்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.02.2026.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி தாக்கல் செய்த சங்கிதிகளை நான் மறுக்கிறேனா என்றால் ஆம். வாதியின் தாயார் மற்றும் பெரியம்மா உடன்பிறந்த சகோதரிகளா என்றால் ஆம். தாவா சொத்தில் வாதி மற்றும அவரின் குடும்பத்தினர் பல வருடங்களாக வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. என் அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்தில் வாதி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அவர் அனுபவிக்க கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது.

2. காலமான வாதியின் பெரியம்மா முத்தம்மாளின் இறுதி காரியங்கள் வாதிதான் செய்தார் என்றால் இல்லை நான் தான் செய்தேன். தாவா சொத்து முத்தம்மாளுக்கு தான் சொந்தம் என்றால் இல்லை. முத்தம்மாள் எந்த வருடத்தில் இறந்தார் என்றால் 1971 என்று நினைக்கிறேன் ஞாபகமில்லை. முத்தம்மாள் 16.05.1977 தேதியில் இறந்தார் என்றால் ஞாபகமில்லை.

3. முத்தம்மாள் இறப்பதற்கு முன்பு வாதி பெயரில் உயில் எழுதி வைத்து இறந்தார் என்றால் இல்லை. மேற்படி உயிலில் என் ஊரை சேர்ந்த தபால்காரார் சீனிவாசன் என்பவர் சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் சீனிவாசனை எனக்கு தெரியும். உயில் எழுதவில்லை. வாதி பெயரில் எழுதப்பட்ட உயில் திருடப்பட்டது என்று வாதி தாவாவில் தெரிவித்துள்ளது பற்றி தெரியாது. தாவா சொத்து என்னுடையது என்பதை நிருபிக்க இந்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்து என் பாட்டி கன்னிம்மாள் பெயரில் உள்ளது மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா சொத்தை 13.02.2006 தேதியில் 1 ஆம் வாதி 2 ஆம் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. 2 ஆம் வாதியின் மாற்றுத்திறனாளி தம்பிக்கு 2016 ஆம் ஆண்டில் செட்டில்மெண்ட எழுதி வைத்தார் என்றால் தெரியாது. நான் 2015 ஆம் ஆண்டு அசல் வழக்கு எண். 117/2015 வழக்கில் வாதியை நான் ஏன் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் தெரியாது. அசல் வழக்கு எண். 117/2015 வழக்கில் வாதியை தரப்பினராக சேர்த்தால் எனக்கு பாதகமாக தீர்ப்பு வழங்க நேரிடும் என்பதால் அவரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5. மேற்படி வழக்கில் வாதிகளை சேர்க்காமல் ஒருதலைபட்ச தீர்ப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிதான் அனுபவித்தில் உள்ளார் என்றாலும் என் சொத்து என்பதற்கு என்ன ஆவணம் இந்நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாட்டி பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வாதி தாவா சொத்து குறித்து பட்டா, வரைபடம், மின் இணைப்பு ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார் நான் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் என் பாகத்தை 2005 ஆம் ஆண்டு சுந்தரவதனம் என்பவருக்கு விற்றுவிட்டேன். நான் மற்றும் என் சகோதரர்கள் வாதிகளை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற தொந்தரவு செய்கிறோம் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் நான் இருப்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் பக்கத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து வாதியின் கட்டுப்பாட்டிலும் மற்றும் அவரின் முழு பராமரிப்பில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என் கட்டுப்பாட்டில் உள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் வாதி அத்துமீறி வசித்து வருகிறாரா என்றால் ஆம். மேற்படி வாதி அத்துமீறி வந்திருந்தால் அவர்களை வெளியேற்ற என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் மற்றும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

7. வாதிதான் தாவா சொத்தில் முழு அனுபவத்திலும் உள்ளார் என்றாலும் அவருக்கு தான் தாவா சொத்தில் முழு உரிமையும் உள்ளது என்றால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**